இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 26-07-2024

# உயர்வுக்கு அடித்தளம் இட்டது யார்?

மின் கட்டணத்தை உயர்த்தி விட்டதாகச் சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறது அ.தி.மு.க. அப்படி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தார்மீக அருகதை இருக்கிறதா அ.தி.மு.க.வுக்கு?

“தற்போதைய மின் கட்டண உயர்வுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசே முழுக் காரணம்” என்று நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் சொல்லி இருப்பதுதான் முழு உண்மை ஆகும். ஒன்றிய அரசு திணித்த ‘உதய் மின் திட்டத்தில்’ அன்றைய அ.தி.மு.க. அரசு இணையாமல் இருந்திருந்தால் இதுபோன்ற கட்டுப்பாட்டுக்குள் நாம் சிக்கி இருக்க மாட்டோம்.

2016 சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டபோது அந்தக் கட்சிக்கு ஆதரவாக, தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்ய வந்தார் அன்றைய ஒன்றிய எரிசக்தித் துறை அமைச்சர் பியூஷ் கோயல். அப்போது கமலாலயத்தில் பியூஷ் கோயல் அளித்த பேட்டி முக்கியத்துவம் வாய்ந்தது. ஒன்றிய அரசின் உதய் மின் திட்டத்தை, அன்றைக்கு முதல்வராக இருந்த ஜெயலலிதா கடுமையாக எதிர்த்தார். அந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டையும் சேர்ப்பதற்காக, எரிசக்தித் துறை அமைச்சரான பியூஷ் கோயல், தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார். ஆனால், ஜெயலலிதா அவரையோ, மோடி அரசையோ கொஞ்சம்கூட சட்டை செய்யவில்லை. அந்தக் கோபத்தை பத்திரிகையாளர் சந்திப்பில் காட்டினார் பியூஷ் கோயல்.

“இந்திய மாநிலங்களிலேயே தனி மாநிலமாக, தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே மத்திய அரசு, அடைய முடியாத மாநிலம் என்றால், அது தமிழ்நாடுதான். தமிழ்நாட்டு முதலமைச்சரைச் சந்திக்க முடியவில்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களிடம் பலமுறை பேச முயன்றேன். எந்தப் பலனும் இல்லை. இந்தியாவின் 28 மாநிலங்களில் என்னால் சகஜமாகப் பேச முடியும். ஆனால், தமிழகத்தில் மின்துறை அமைச்சர் எல்லா விஷயத்தையும் கேட்டுவிட்டு, ‘அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்’ என்கிறார். அ.தி.மு.க. கட்சி எம்.பி.க்கள் யாரும் நாடாளுமன்றத்தில் வாயைக்கூட திறக்க முடியாது. சென்னையில் எழுதித்தரப்பட்ட உரையைத்தான் அவர்கள் அப்படியே படிப்பார்கள்” என ஜெயலலிதாவையும், அ.தி.மு.க.வையும் விளாசித் தள்ளினார் பியூஷ் கோயல். அவருடைய பேட்டியை தமிழில் டப் செய்து தமிழக பா.ஜ.க. வெளியிட்டிருந்தது. அந்த வீடியோ இன்னும் சமூக வலை தளங்களில் உள்ளது.

உடனே கொதித்துப் போய் அன்றைய நிதி அமைச்சர் பன்னீர்செல்வமும் மின் துறை அமைச்சர் நத்தம் விசுவநாதனும் பியூஷ் கோயலுக்கு எதிராக கண்டன அறிக்கை வெளியிட்டார்கள். “நீ அவலைக் கொண்டு வா, நான் உமியைக் கொண்டு வருகிறேன் என்பது போலத்தான் இருக்கிறது ‘உதய்’ மின் திட்டம்” என நத்தம் விசுவநாதன் சீறினார். “மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள ‘உதய்’ திட்டம் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் உண்மையிலேயே நன்மை பயக்கக்கூடிய திட்டம் இல்லை” என்றார்.

அன்றைய அமைச்சர் ஓ.பன்னீர்செல்வமோ, “அரசியல் ஆதாயம் தேட பியூஸ் கோயல் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்” என்றார். இப்படி ஜெயலலிதா இருந்த போது ‘உதய்’ மின் திட்டத்தை எதிர்த்தவர்கள்தான், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆதரித்தார்கள்.

பன்னீர்செல்வமும் பழனிசாமியும் பா.ஜ.க.வின் பாதம் தாங்கிகளாக மாறி, ‘உதய்’ மின் திட்டத்தில் கையெழுத்துப் போட்டார்கள். எந்த பியூஷ் கோயலுக்காக அன்று தலைவிக்காக வாள் சுழற்றினார்களோ, அதே பியூஸ் கோயலிடம் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்திய கட்சிதான் அ.தி.மு.க.

2015 நவம்பரில் ‘உதய்’ மின் திட்டம் செயல்பாட்டுக்கு வருகிறது. ஆனால், தமிழ்நாடு மட்டும் திட்டத்தில் இணையவில்லை. சுமார் 22,400 கோடி ரூபாய் அளவிற்கு தமிழகத்திற்கு சேமிப்பு தரக்கூடும் என்று பா.ஜ.க. அரசு தேன் தடவிய நாவில் பேசியது. ஆனால், அன்றைக்கு முதல்வராக இருந்த ஜெயலலிதா ஏற்கவில்லை. ‘உதய்’ மின் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தி.மு.க. எடுத்துரைத்தது.

**ஜெயலலிதா ஏற்க மறுத்த திட்டத்தை அன்றைய அ.தி.மு.க. பொறுப்பு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஏற்றுக் கொண்டார். ஜெயலலிதா அப்போலோவில் இருந்த நேரத்தில் அவர் மீண்டு(ம்) வரமாட்டார் என்ற எண்ணத்தில் 2016 அக்டோபர் 21 - அன்று அன்றைய பொறுப்பு முதல்வர் பன்னீர்செல்வம் ஏற்றுக் கொண்டார். 2017 ஜனவரி 9 ஆம் தேதி ‘உதய்’ திட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு இணைந்தது.**

**எந்த பியூஸ் கோயலை எதிர்த்தார்களோ, அந்த எரிசக்தித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில் தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் தங்கமணி முன்னிலையில் புதுடெல்லியில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்படியானால் இன்றைய மின் கட்டண மாற்றங்களுக்கு அ.தி.மு.க. தானே காரணம்?**

**ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்த வேண்டிய உத்தரவாதத்தை அளித்தது பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசுதான். அப்படியானால் இன்றைய மின் கட்டண மாற்றங்களுக்கு அ.தி.மு.க.தானே காரணம்?**

**இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற வகையில் தான் திசைதிருப்பல் போராட்டங்களை நடத்துகிறது அ.தி.மு.க.**

---

தமிழ்நாடு, மேற்குவங்க மாநிலங்களைத் தொடர்ந்து

## கர்நாடகா சட்டப்பேரவையிலும் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றம்!

பெங்களூரு, ஜூலை 26- மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கைக்கு நடத்தப்படும் நீட் நுழைவுத் தேர்வில் இருந்து விலக்கு அளிக்குமாறு தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இந்தாண்டு நடந்த நீட் நுழைவுத் தேர்வில் வினாத்தாள் கசிவு, ஊழல் என அடுக்கடுக்கான முறைகேடுகள் நடந்தன. வசதிப் படைத்தவர்கள் மட்டுமே நீட் தேர்வில் வெற்றிபெற முடியும் என நிலை இருப்பதாக மாணவர்கள் குற்றம் சாட்டினர்.

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி இந்தியா கூட்டணி ஆளும் மாநிலங்கள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இதனிடையே, மேற்கு வங்க மாநிலத்தில் நீட் தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், கர்நாடகா சட்டப்பேரவையிலும் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்துவிட்டு, பழைய முறைப்படி மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று கர்நாடக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொள்வற்காக வருகை தந்த ஐக்கிய அமீரகத்தின் வர்த்தகத் துறை அமைச்சர் அப்துல்லா பின் தௌக் அல்மரி (His Excellency Thiru. Abdulla bin Touq Al Marri) அவர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

---

மாதாந்திர அட்டவணைப்படி காவிரி நீர் வழங்க வேண்டும்!

## மேகதாது திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி தரக் கூடாது!

### புதுடெல்லியில் ஒன்றிய அமைச்சரிடம் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஜூலை 26 - தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அட்டவணைப்படி காவிரி நீர் வழங்க வேண்டும்; மேகதாது அணைத் திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது என்பன உள்ளிட்ட 6 கோரிக்கைகளை ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சரிடம், தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேரில் வலியுறுத்தி உள்ளார்.**



தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (25-07-2024) புதுடெல்லியில், ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறையின் அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்களையும், ஒன்றிய ஜல் சக்தி துறையின் இணை அமைச்சர்கள் வி.சோமண்ணா, ராஜ்பூஷன் சௌத்திரி அவர்களையும் சந்தித்து தமிழ் நட்டின் பன்மாநில நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் இணைப்பு திட்டங்களை செயல்படுத்துதல், பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். அதன் விவரங்கள் பின்வருமாறு;

1. **காவிரி பிரச்சனை**

i)கர்நாடகா காவிரி நீரை தமிழ் நாட்டிற்கு மாதாந்திர அட்டவணைப் படி அளிப்பது குறித்து;

உச்சநீதி மன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பின்படி மாதவாரியாக பில்லிகுண்டுலுவில் நீரை அளிக்க அறிவுறுத்துமாறு கோரப்பட்டது.

**ii) மேகதாது அணை திட்டம்:**

கர்நாடகா உத்தேசித்துள்ள மேகதாது திட்டம் தமிழ் நாட்டிற்கு பாதிப்பை விளைவிக்கும், என்பதால் அதற்கு ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் காவிரி படுகையில் நீர்பற்றாகுறை காலங்களில் விகிதாசாரத்தின் படி நீரை பங்கீடு செய்ய அறிவியல் பூர்வ விதிமுறையை (formula வை) நிர்ணயிக்க ஆணையத்தை வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**iii) வெண்ணாறு பாசன கட்டமைப்பை நவீனப்படுத்துதல் திட்டம் 2:**

காவிரியின் கிளை நதியான வெண்ணாற்றின் உபபடுகையில் உள்ள பாசன கட்டமைப்பை நவீனப்படுத்தும் இரண்டாம் கட்ட திட்டத்தினை செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Development Bank) நிதியுதவியை பெற தேவையான ஒன்றிய அரசின் ஒப்புதல்களை பெற மத்திய நீர்வள குழும்ம் (CWC) மற்றும் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகமும் அவைகளின் ஒப்புதல்களை உடனே அளிக்க வேண்டப்பட்டது.

**2.கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டம்:**

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA) தயாரித்துள்ள கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணார் காவிரி இணைப்புக் கால்வாய் திட்டம் தென்மாநிலங்களின் நீர்வளத்தை பெருக்கும் ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தை உடன் செயல்படுத்த ஒன்றிய அரசின் நீர்வள அமைச்சகம் மற்றும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA), தேவையான அனைத்து நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாமல் எடுக்க வேண்டப்பட்டது.

**3.காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்**

இத்திட்டம் தென்னிந்திய தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தில் உள்ள 9 இணைப்பு கால்வாய்களில் ஒன்றாகும். இத்திட்டம் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (NWDA) தயாரித்த திட்ட அறிக்கையின் ஒரு பகுதியாகும். இத்திட்ட இணைப்புக் கால்வாயை உடன் செயல்படுத்தினால் வெள்ள காலங்களில் காவிரி ஆற்றில் வரும் உபரி நீரினை மாயனூரிலிருந்து தெற்கு மாவட்டங்களான புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகரில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் நிலத்தடிநீர் செறிவூட்டலுக்கு பயன்படுத்துவதோடு, டெல்டா பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் கட்டுமான சேதங்களை குறைக்கவும், வெள்ள சேதத்திலிருந்து நெற்பயிர்களை காப்பாற்றவும் முடியும். அவசியம் கருதி, இத்திட்டத்தை தமிழ் நாடு அரசு 2020லிருந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், இந்த ஆண்டு, 202425, ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பீகார் மாநிலத்தில் உள்ள கோசி - மேச்சி நதிகள் இணைப்புக் கால்வாய் திட்டத்திற்கு இணையானது. காவிரி - குண்டாறு இணைப்பு திட்டத்தின் முதற்கட்ட பணிகளுக்காக ரூ. 6941 கோடி செலவு செய்ய தமிழ்நாடு அனுமதி அளித்து, இது வரையில் ரூ. 245.21 கோடி செலவு செய்துள்ளது. விரைவில் செயல்படுத்த ஏதுவாக தேவைப்படும் ஒன்றிய அரசின் கொள்கை அளவு ஒப்புதலையும், நிதியையும் அளிக்க ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

**4.முல்லைப்பெரியாறு - எஞ்சிய பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்:**

முல்லைப்பெரியாறு அணையிலுள்ள சிற்றணை மற்றும் மண் அணைகளை, 27.02.2006 மற்றும் 07.05.2014 தேதியிட்ட மாண்பமை உச்சநீதி மன்ற ஆணைகளின்படி வலுப்படுத்தவும், பிரதான அணையில் கிரவுட்டிங் (Grouting) செய்யவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் கேரள அரசு இதுவரை ஒத்துழைக்கவில்லை. 15 மரங்களை அகற்றவும் தேவையான அனுமதிகளை வழங்கவில்லை. மேலும், இந்த பணிகளை செய்ய தேவையான கட்டுமான பொருள்களை வனப்பகுதியிலுள்ள சாலை வழியாக எடுத்துச் செல்லவும், அந்த சாலையை சீரமைக்கவும் கேரள அரசு ஒத்துழைக்கவில்லை. அதற்கு, தேவையான அனுமதிகளை வழங்குமாறு கேரள அரசை அறிவுறுத்த ஒன்றிய நீர்வள அமைச்சரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

**5.பெண்ணையாறு பன்மாநில நீர் பிரச்சனைக்கு தீர்வு காண ஒரு நடுவர் மன்றம் அமைத்தல்**

கர்நாடக அரசு தன்னிச்சையாக பன்மாநில நதியான பெண்ணையாற்றின் உபநதியாகிய மார்கண்டேய நதியில், குடிநீர்த் தேவை என்ற போர்வையில் ஒரு பெரிய அணையைக் கட்டியுள்ளது. இச்செயல் 1892 ஆம் ஆண்டு மெட்ராஸ் - மைசூர் ஒப்பந்தத்தை மீறுவதாகும். இது தமிழ் நாட்டிற்கு மிக பாதிப்பை ஏற்படுத்துவதாகும். மேலும், பெண்ணையாற்றின் நீரை நேரடியாக இறைத்து பாசனத்திற்கு பயன்படுத்துகிறது. இச்செயல்களை எதிர்த்து, தமிழ் நாடு தொடர்ந்த வழக்கில் மாண்பமை உச்சநீதி மன்றம் 14.11.2019ல் இப்பிரச்சனைக்கு நடுவர் மன்றத்தை நாட தமிழ்நாட்டை அறிவுறுத்தியது. ஆனால், ஒன்றிய அரசு, இரு மாநிலங்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்த 2020ல், ஒரு குழு அமைத்தது. எந்த தீர்வும் காணமுடியவில்லை. ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைக்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதற்கிடையே, மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த ஒரு குழுவை, மாண்பமை உச்சநீதி மன்றம் 24.01.2024 அன்று அளித்த ஆணையின்படி, ஒன்றிய அரசு அமைத்தது. இந்த குழு இன்னும் அதன் அறிக்கையை அளிக்கவில்லை. ஆகையால் இக்குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று, இப்பிரச்சனைக்கு தீர்வு காண உடன் ஒரு நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

**6.குளங்கள் சீரமைப்பு திட்டத்திற்கு ஒன்றிய அரசின் பங்கு நிதியில் உள்ள நிலுவை தொகையை விரைவில் வழங்க கோருதல்.**

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்கீட்டுடன் தமிழ் நாட்டிலுள்ள 14,306 குளங்கள் பல கட்டங்களில், 2015 முதல், சீரமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் பங்கில் நிலுவையில் உள்ள ரூ. 212 கோடியை உடனடியாக தமிழ் நாடு அரசிற்கு அளிக்க வலியுறுத்தப்பட்டது.


ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் (ஜல் சக்தி) சி.ஆர். பாட்டீல்; ஒன்றிய அரசின் நீர்வளத் துறை (ஜல் சக்தி) இணை அமைச்சர் வி.சோமண்ணா; ஒன்றிய நீர் வளத்துறை (ஜல் சக்தி) இணை அமைச்சர் டாக்டர் ராஜ் பூஷன் சவுத்ரி; ஒன்றிய அரசின் நீர்வளத் துறை செயலாளர் திருமதி. தேவஸ்ரீ முகர்ஜி; மத்திய நீர்வள குழுமத்தின் தலைவர் குஷ்விந்தர் வோரா; தமிழ்நாடு அரசின் டெல்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன்; தமிழ்நாடு அரசின் கூடுதல் உள்ளுறை ஆணையர் (தமிழ்நாடு இல்லம்) ஆஷிஷ்குமார், மற்றும் தலைவர், காவிரி தொழில்நுட்ப குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர் பிரிவு ஆர். சுப்ரமணியன் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

---

சென்னையில் இருந்து டெல்லி செல்ல விஸ்தாரா விமானத்தில்

## ரூ.33 ஆயிரத்திற்கான டிக்கெட் ரூ.93 ஆயிரத்திற்கு விற்பனை!

### மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. குற்றச்சாட்டு!



**புதுடெல்லி, ஜூலை 26 - சென்னையில் இருந்து டெல்லிக்கு செல்ல விஸ்தாரா விமானத்தில் ரூ.33 ஆயிரத்திற்கான டிக்கெட் ரூ.93 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படு கிறது என்று மக்களவையில் கழக எம்.பி. தயாநிதி மாறன் குற்றம்சாட்டினார்.**

மக்களவை கூட்டத் தொடர் தொடங்கி நடந்து வருகிறது. நேற்று காலையில் கூட்டம் தொடங்கியதும் கழக உறுப்பினர் தயாநிதிமாறன் பேசியதாவது: -

விஸ்தாரா விமானத்தில் ஆன்லைனில் டிக்கெட் முன்பதிவு செய்யும் சாப்ட்வேரை டி.சி.எஸ். நிறுவனம் இயக்கி வருகிறது. நான் அந்த விமானத்தில் சென்னையில் இருந்து டெல்லிக்கு செல்ல டிக்கெட் முன்பதிவு செய்தேன். அதில் டிக்கெட்டின் விலை ரூ.33 ஆயிரம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், ரூ.93 ஆயிரம் வசூலிக்கப்பட்டது.

அதேபோல், டிக்கெட் முன்பதிவை ரத்து செய்யும்போதும் அதிகளவு முறைகேடு நடைபெறுகிறது.

இதுகுறித்து விமான போக்குவரத்துத் துறை உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்துபேசிய ஒன்றிய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் கூறுகையில்,

‘இதுகுறித்து முழுமையாக விசாரிக்கப்படும். இதில் ஏதாவது தவறு நடந்திருந்தால் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.